**மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாக விளையாட்டு அரங்கில் 'முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்' என்ற உறுதிமொழியை வாசித்தும், தூய்மையின் முக்கியத்துவத்தை குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கியும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார். (27.02.2018)**

காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு ஆளுநர் அவர்கள் முதலாவதாக படப்பை ஆரம்ப சுகாதார மையத்தை இன்று பார்வையிட்டார். அங்கு அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு, முகாமில் சுகாதாரத் துறையின் பல்வேறு பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். ஆரம்ப சுகாதார மையத்தில் கருவுற்ற 10 தாய்மார்களுக்கு பேறுகால நிதியுதவிகள் மற்றும் குழந்தை பேறு பெற்ற 10 தாய்மார்களுக்கு அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகங்களை வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டம் குறித்து மாண்புமிகு ஆளுநரிடம் தெரிவிக்கும்போது, டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2017–2018 நிதியாண்டில் 32 ஆயிரத்து 568 பயனாளிகளுக்கு ரூபாய் 30.76 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என்றும், ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் 2017–2018 ஆம் நிதியாண்டில் 10 ஆயிரத்து 201 பயனாளிகளுக்கு ரூபாய் 76 இலட்சம் மகப்பேறு கால நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதென்றும், அம்மா குழந்தைகள் நலப் பரிசு பெட்டகம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் நிதியாண்டில் 13 ஆயிரத்து 226 பயனாளிகளுக்கு அம்மா குழந்தைகள் நலப் பரிசு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளதென்றும், டிசம்பர் 2017 வரை ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 601 வளர் இளம் பெண்களுக்கு ரூபாய் 3.17 இலட்சம் மதிப்பீட்டில் சேனிடரி நாப்கின்கள் வழங்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

ஏகனாம்பேட்டை அரசு மகளிர் மேலநிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள் தூய்மை கடைபிடித்து சுகாதாரமாக வாழ்வதற்கு கடைபிடிக்க வேண்டிய 10 கட்டளைகளை மாணவிகள் வாசித்தனர். பின்னர் கை கழுவும் முறையைப் பயன்படுத்தி, தூய்மையான நீரில் கைகளை சோப்பினால் கழுவுவதற்கு முன்பிருந்த நிலையையும், சோப்பினால் கை கழுவியதற்கு பின்பு இருந்த நிலையையும் உள்ள வித்தியாசத்தை ஆளுநரிடம் செய்முறை விளக்கம் மூலம் செய்து காண்பித்தனர்.

மாணவிகளிடம் ஆளுநர் கலந்துரையாடியபோது, மாணவர்கள் இந்த 10 கட்டளைகளை பின்பற்ற சுகாதாரமாக இருக்கவேண்டும். மாணவ–மாணவிகள் சுகாதாரமாக இருந்தால் கல்வி கற்பதில் கவனம் செலுத்த முடியும். மாணவ–மாணவிகள் எளிமையாக வாழ கற்றுக்கொள்ளுங்கள். நமக்கு கடவுள் தேவையான அனைத்தையும் தந்துள்ளார். மகாத்மா காந்தியினை பின்பற்றி எளிமையாக வாழ

கற்றுக்கொள்ளுங்கள். தன்னுடன் பழகும் மற்றவர்களுக்கு சுகாதாரம் குறித்து எடுத்துக்கூறி, அவர்களை சுகாதாரமாக இருக்கும்படி கற்றுத்தர வேண்டும். நேர மேலாண்மை மிகவும் முக்கியமானது. நேர மேலாண்மையை மிகவும் கவனமாக பின்பற்ற வேண்டும் என கூறினார். பின்னர் அங்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மரக்கன்றுகளை நட்டார்.

இப்பள்ளியில் படிக்கும் 956 மாணவிகளின் இல்லங்களில் 914 பேர் இல்லங்களில் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது. கழிப்பறை கட்ட இடம் இல்லாத 42 மாணவிகளின் இல்லங்களுக்கு சமுதாய கழிப்பறை 2017–18ஆம் நிதியாண்டில் கட்டித்தரப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் ஆளுநரிடம் தெரிவித்தார்.

பின்னர் கருக்குப்பேட்டை திம்மையன்பேட்டை ஊராட்சியில் பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள ரூபாய் 2 இலட்சத்து 450 மதிப்பிலான வீடுகளை திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் இத்திட்டம் குறித்து மாண்புமிகு ஆளுநரிடம் தெரிவிக்கும்போது, 2016–2017 ஆம் நிதியாண்டில் பிரதம மந்திரியின் குடியிருப்பு திட்டத்தின்கீழ் 11 ஆயிரத்து 215 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதில் 260 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதென்றும், 10 ஆயிரத்து 955 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறதென்றும், இதுபோன்று 2017–2018 ஆம் நிதியாண்டில் 7 ஆயிரத்து 735 வீடுகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 521 வீடுகள் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதென்று தெரிவித்தார்.

பின்னர் சுற்றுலா மாளிகை வந்த ஆளுநரிடம், பொதுமக்கள் நேரடியாக 157 கோரிக்கை மனுக்களை அளித்தனர். ஆளுநரிடம் கொடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சிறப்பு கவுண்டர் மூலமாக 69 மனுக்கள் வரப்பெற்றது. மொத்தம் 226 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் தெரிவித்தார். பின்னர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள் இன்று தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் பொதுமக்களிடையே தூய்மையின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் முழு சுகாதார தமிழகம், முன்னோடி தமிழகம் என்றும் உறுதியை வாசிக்க, பொதுமக்கள், மாணவ–மாணவியர், தொண்டு நிறுவன பிரதிநிதிகள், சுகாதார தூய்மை பணியாளர்கள், மகளிர் சுயஉதவிக் குழுவினர், அனைத்துத் துறை அலுவலர்கள் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். பள்ளி மாணவ மாணவியர்களிடமும், பொதுமக்களிடமும் தூய்மையின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களையும் வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மேலும், தூய்மை காவலர்களுக்கு உபகரணங்களை

வழங்கினார். தூய்மையே சேவை சுகாதார விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஆய்வின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப. அவர்கள் தமிழக ஆளுநரிடம் கூறியதாவது. தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 633 ஊராட்சிகளில் 412 ஊராட்சிகளில் திறந்தவெளியில் மலம் கழிக்காத ஊராட்சியாக மாற்றப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஊராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, கிராம சபை தீர்மானம் மூலம் திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற ஊராட்சியாக அறிவித்துக்கொண்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 4 இலட்சத்து 11 ஆயிரத்து 423 வீடுகளில் ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 214 வீடுகள் கழிவறைகள் உள்ள வீடுகளாகவும், எஞ்சியுள்ள வீடுகள் 2014 ஆம் ஆண்டு முதல் கழிவறை பயன்படுத்தும் வீடுகளாக மாற்றப்பட்டுள்ளது. 42 சதவீதமாக இருந்த கழிவறை பயன்பாடு, பிப்ரவரி 2018 ஆம் மாதத்தில் 100 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2014–2017 வரை இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 12 ஆயிரம் வீதம் ரூபாய் 59 கோடி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

பின்னர் காஞ்சி மடத்திற்கு சென்ற மாண்புமிகு ஆளுநர், காஞ்சி சங்கராச்சாரியார் சுவாமிகளை சந்தித்து ஆசி பெற்றார். பின்னர் காமாட்சியம்மன் கோயிலில் சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. சந்தோஷ் ஹதிமாணி, இ.கா.ப. மாவட்ட வருவாய் அலுவலர், திரு. நூர்முகம்மது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

காஞ்சிபுரம்.